# வலயக்கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம்– 2017

| தரம் - 11 | வரலாறு மாதிரிப்பரீட்சை -I | நேரம்:- 1மணி |
|---|---|---|

## பகுதி - I

- **கவனிக்குக.**
- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **1தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. இலங்கையின் வரலாற்றினை அறிவதற்கு கி.பி 4 ஆம் நூற்றாண்டளவில் எழுதப்பட்ட மிகப்பழமையான உள்நாட்டு இலக்கிய மூலாதாரமான நூல்
   1. தீபவம்சம் 2. மகாவம்சம் 3. சூளவம்சம் 4. போதிவம்சம்.

2. இலங்கையின் நீண்ட கால வரலாற்றினை தொடர்ச்சியாகத் தருகின்ற மகாவம்சம் என்னும் நூலினை எழுதிய மகாநாமதேரர் வசித்த பிரிவேனா
   1. ஆலகானபிரிவேனா 2. பெப்பிலியானே சுனேந்திர தேவிபிரிவேனா
   3. திக்சந்தசெனவியாபிரிவேனா 4. வீதாகமகணானந்தா பிரிவேனா

3. கி.பி 90 - 168 காலப்பகுதியில் உரோமப்பேரரசின் அலெக்சாந்திரியாவில் வாழ்ந்த கிரேக்க இனத்தவரான குளோடியஸ் தொலமி அவர்களால் வரையப்பட்ட உலகப்படத்தில் இலங்கைக்கு வழங்கப்பட்ட பெயர்
   1. செரண்டிப் 2. தப்ரபேன் 3. சிவப்புத்தீவு 4. இரத்தினதுபீபம்

4. பண்டையகால நீதிமன்றத் தொகுதிகள், நீதிமன்றம் தொடர்பான தகவல்கள் கிடைக்கப்பெற்ற மூலாதாரம்
   1. 3ஆம் உதயனின் சொரபொரவாவிக் கல்வெட்டு
   2. 4ஆம் மகிந்தனின் வெஸ்ஸகிரிய கல்வெட்டு
   3. நிஸங்கமல்லனின் கல்பொத்த கல்வெட்டு
   4. முதலாம் கஜபாகு மன்னனின் சித்துல்பவ்வ கல்வெட்டு

5. பெறுமதியான பெரும்பாலான தொல்பொருட்கள் இன்று அழிவடைவதற்கான காரணம்
   1. காலநிலை மாற்றம்
   2. உள்கட்டுமான வசதிகளை மேற்கொள்ளவது
   3. நின்று நிலைத்திருக்கக்கூடிய பொருட்களால் அவை ஆக்கப்பட்டிருக்கிறது.
   4. நாட்டின் அபிவிருத்திக்கு அவை பாதகமாக அமையும் என்ற மனப்பாங்கினால் பராமரிக்காது விடப்படுகின்றமை

6. புராதன தொல்பொருட்கள் காணப்படும் இடங்கள் இன்று அகழ்ந்து நாசமாக்கப்படுவதற்கான காரணம்
   1. பொருளாதர ரீதியில் பெறுமதியான பொருட்கள் புதைந்திருக்கலாம் எனக்கருதுகின்றமை.
   2. அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
   3. சனத்தொகை அதிகமாக வளர்ச்சியடைந்தமை.
   4. சேனைப்பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதற்கு

7. இலங்கையின் அதிவறண்டவலய நிலத்தின்டியில் களிமண்ணுடன் கூடிய மணல் மண்ணினால் மூடப்பட்டுள்ள இரணைமடுச் சரளைக்கல் படிவுகள் புதையுண்ட யுகம்
   1. கேம்பிரியன் யுகம் 2. பிறிகேம்பிரியன்யுகம்
   3. பிளைத்தோசின் யுகம் 4. மயோசின் காலம்

8. புராதன வீடமைப்புத் தொழிநுட்பத்தில் தான் வாழ்ந்த இடத்தை வாழ்வதற்கு ஏற்ற வகையில் மாற்றிக் கொள்வதற்கு வரலாற்றுக்கு முந்திய கால மனிதனால் முடியுமாக இருந்தது என்பதற்கு ஆதாரமான கருங்கல் கட்டடம் ஒன்றின் சிதைவுகள் கண்டெடுக்கப்பட்ட அகழ்வு
   1. பெல்லன் பதிபெலஸ்ஸ அகழ்வு 2. கித்துள்கல பெலிலென அகழ்வு
   3. ராவண எல்ல அகழ்வு 4. பாகியன்கல அகழ்வு

9. 35,000 வருடங்களுக்கு முன் வரலாற்றுக்கு முற்பட்டகால மனித சமூகத்தின் வாழிடமாக விளங்கிய தாழ்நில ஈரவலயக் குகை.
1. கித்துள்கல பெலிலென 2. பட்டதொம்பலென
3. பெல்லன் பதி பெலஸ்ஸ 4. பாகியன்கல

10. தாழ்நில ஈரவலயத்தில் வாழ்ந்த மக்கள் அதிகம் விரும்பிய உணவு.
1. நத்தைகள் 2. சிறுமான் இறைச்சி 3. தித்தயா மீன் 4. வள்ளிக்கிழங்கு

11. கல்லாயுதங்கள் முழுமையாகக் கைவிடப்பட்ட காலம்
1. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் 2. முன் வரலாற்றுக் காலம்
3. ஆரம்ப வரலாற்றுக்காலம் 4. வரலாற்றுக் காலம்

12. பிராந்திய ஆட்சியாளர்கள் பலருடன் சண்டையிட்டு அப்பிரதேசங்களைக் கைப்பற்றி அரசனான மன்னன்
1. தேவநம்பியதீசன் 2. துட்டகைமுனு 3. பண்டுகாபயன் 4. வசபன்

13. 1ஆம் உபதிஸ்ஸ மன்னன் கர்ப்பிணித்தாய்மாரின் தேவைக்காக அமைத்த பிரசவ விடுதிகளுக்கு வழங்கப்பட்ட பெயர்
1. உபசக்கரோக நாச 2. சொத்தி சால 3. சீவக சாலா 4. பஸவந்தி நாமகால

14. கலாவாவியில் இருந்து திஸவாவிக்கு நீரைக் கொண்டு செல்வதற்காக அமைக்கப்பட்ட கால்வாய்
1. எலகரக்கால்வாய் 2. யோதக்கால்வாய் 3. மினிப்பேகால்வாய் 4. அங்கமடில்ல கால்வாய்

15. பிரதேச ஆட்சியில் ஈடுபட்டிருந்த பெண்களுக்கு வழங்கப்பட்ட பெயர்
1. அரசி 2. பருமர் 3. பருமக்கலு 4. பதுபாச்சிகா

16. அலகபய மகாராஜா எனத் தன்னைக் கருதிக்கொண்ட மன்னன்
1. 1 ஆம் காசியப்பன் 2. குட்டகண்ணஅபயன் 3. நிசங்கமல்லன் 4. மகாசேனன்

17. புராதன காலத்தில் "பரமானு" என்னும் அளவீட்டு முறை பயன்படுத்தப்பட்டது.
1. காலத்தை அளப்பதற்கு 2. நிறையை அளப்பதற்கு
3. பரப்பை அளப்பதற்கு 4. நீளத்தை அளப்பதற்கு

18. சேனைப்பயிர்ச்செய்கையில் ஈடுபட்டவர்களிடம் அறவிடப்பட்ட வரி
1. மதரமஞ்சக்க 2. கெடுகனக 3. தக்கபதி 4. போஜக்கபதி

19. பின்வரும் கூற்றுக்களை அவதானிக்குக.
- கிராமங்களிடையே திருமணத் தொடர்புகள் பண்டப்பரிமாற்றங்கள், பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளல், என்பவற்றின் போது ஒவ்வொரு கிராமத்தையும் பிரதிநிதித்துவப்படுத்திய நபர்.
- குளத்தொகுதியொன்றும் சம்பந்தப்பட்ட பல கிராமப்பிரஜைகளினதும் நலனுக்கான தீர்மானங்களை மேற்கொள்வதற்கான அதிகாரம் அளிக்கப்பட்ட நபர்

மேற்படி கூற்றுக்களுடன் தொடர்புடைய நபர்களின் சோடி
1. கிராமிக, பருகம 2. இல்லத்தலைவர், பருகம
3. கிராமிக, இல்லத்தலைவர் 4. பருமகர், குர்ஹபதி

20. கீழ்வரும் கூற்றுக்களை அவதானிக்குக.
A - 1ஆம் புவனேகபாகு எகிப்திற்கு வர்த்தக தூதுக்குழுக்களை அனுப்பியமை.
B - 2ஆம் பராக்கிரமபாகு கலிங்கமாகனிடம் இருந்து இலங்கையை மீட்டெடுத்தமை.
C - 6ஆம் புவனேகபாகு பஸ்துன் கோறளைப்பகுதியில் ஏற்பட்ட சிங்கள சங்கய என்னும் புரட்சியை அடக்கியமை.
D - 3ஆம் விஜயபாகு பெலிகலையில் தலதாமாளிகையை அமைத்தமை.

மேற்குறித்த வரலாற்று நிகழ்வுகளைக் கால ஒழுங்கில் ஒழுங்குபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடை எது?
1. ABCD 2. DCBA 3. DBAC 4. DACB

21. கண்டி இராசதானியின் பிரதம, இரண்டாவது பிரதம பிரதானிகள் அழைக்கப்பட்ட முறை
1. பல்லே கம்பா பிரதானி, உடகம்பா பிரதானி
2. ரட்டேரால, ரட்டேமஹுத்தயா
3. முகாந்திரம், விதானை
4. பல்லேகம்பா பிரதானி, விதானை

22. கோட்டை இராச்சியம் மூன்றாகப் பிரிக்கப்பட்ட பின்னர், கோட்டை இராச்சிய ஆட்சியாளன்
1. மாயாதுன்னை 2. 6ஆம்விஜயபாகு 3. 7ஆம்புவனேகபாகு 4. மத்துமபண்டார

- **கீழ்வரும் அட்டவணையில் A தொடக்கம் J வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 23ஆம் , 24ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

| மன்னர்கள் | காலம் | படைப்பு |
|---|---|---|
| A- 3ம்விக்கிரமபாகு | D - தம்பதெனியா | G - அம்பக்க தேவாலயம் |
| B- 6ம்பராக்கிரமபாகு | F - கோட்டை | H - கவிசிலுமின |
| C- 2ம்பராக்கிரபாகு | E - கம்பளை | J - பெப்பிலியானே சுனேந்திராதேவிப் பிரிவேனா |

23. அம்பக்கதேவாலயம் அமைக்கப்பட்ட காலத்தினையும் அதனை அமைத்த மன்னனையும் தரும் விடை.
1. E,A 2. D,B 3. F,B 4. F,A

24. 2ஆம் பராக்கிரமபாகு மன்னனின் இராசதானியையும் அவனது படைப்பினையும் தரும் விடை.
1. D,H 2. E,J 3. E,H 4. D,J

25. கண்டி இராச்சிய காலத்தில் பிரதானிகளின் கட்டளைகள் செய்திகள் போன்றவற்றைப் பிராந்திய அதிகாரிகளிடம் கொண்டு சென்றவரின் பெயர்
1. விதானை 2. திசாவை 3. கடுபுள்ளே 4. ரட்டே மஹுத்தயா

26. 1602 ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்து முதலாம் விமலதர்மசூரியனைச் சந்தித்த ஒல்லாந்துத் தூதுவன்
1. பன்ளங்கல்பெக்
2. வான்ஸ்பில் பேர்ஜன்
3. சில்தவாட்
4 . வெஸ்டர் வோல்ட்

A – கரையோராப்பகுதி இழக்கப்பட்டது
B – போர்த்துக்கேய வெளியேற்ற உதவுதல்
C – யானை தவிர்ந்த ஏனைய வர்த்தகப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் ஏகபோக உரிமை கிடைத்தல்
D – மரபுரீதியான வர்த்தகம் பாதிக்கப்பட்டது.
E – ஒல்லாந்தருக்கு ஏற்படும் செலவை பொருட்கள் மூலம் அரசன் செலுத்த உடன்படல்.

27. 1658 ஆம் ஆண்டு ஒல்லாந்தருடன் 2ஆம் இராஜசிங்கன் செய்து கொண்ட ஒப்பந்தத்துடன் தொடர்புடைய தகவல்கள்
1. A, E 2. C,B 3.E,D 4. C,E

28. 1766 ஆம் ஆண்டு கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் ஒல்லாந்தருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தினால் ஏற்பட்ட விளைவுளைத் தரும் விடை.
1. A, D 2. C,D 3. E, D 4. A, B

29. 1760 ஆண்டின் இறுதியில் நீர்கொழும்பு மாத்தறைப் பகுதியில் ஒல்லாந்தருக்கு எதிராக ஏற்பட்ட கலகங்களின் போது அப்பகுதிக்கு கண்டி மன்னனர் அனுப்பப்பட்ட படைக்குத் தலைமை தாங்கியவன்
1. கலகொட அதிகாரம்
2. கடுபுள்ளே
3. பல்லேகம்பா பிரதானி
4. உடகம்பா பிரதானி

30. 1630 ஆம் ஆண்டு ரந்தெனி வெலவில் போர்த்துக்கேயருடனான போரின் போது கண்டியை ஆட்சி செய்த மன்னன்

1. 1 ஆம் விமலதர்மசூரியன்
2. 2ஆம் இராஜசிங்கன்
3. செனரத்
4. 2ஆம் விமலதர்மசூரியன்

A யாப்பகூவ　　B மினிப்பே　　C கோவிந்தமலை

D தம்பதெனியா　　E குருநாகல்

31. கி.பி 1232 ஆண்டு தம்பதெனியா வைத் தலைநகரமாக 3 ஆம் விஜயபாகு தெரிவு செய்யும் வரை சுப தளபதியில் உருவாக்கப்பட்ட பாதுகாப்பு அரணைக் குறிக்கும் எழுத்து

1. A　　2. B　　3. E　　4. C

32. ஆதிபாத புவனேகபாக, சங்கதளபதி போன்றோரால் உருவாக்கப்பட்ட பாதுகாப்பு அரண்களைக் குறிக்கும் விடை

1. A,D　　2. C,B　　3. E,B　　4. C, D

33. நவீன வானியல் விஞ்ஞானத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர்

1. கெப்லர்　　2. கலிலியோ கலிலி　　3.ஐசாக் நியூட்டன்　　4. நிக்கல் கொபர்னிகஸ்

34. 18 ஆம் நூற்றாண்டின் இறுதி அரைப்பகுதியில் கைத்தொழிற் புரட்சி ஏற்பட்ட ஐரோப்பிய நாடு

1. ஜேர்மனி　　2. பிரான்ஸ்　　3. பிரித்தானியா　　4. பெல்ஜியம்

35. நில அடைப்பு இயக்கம் என்பது

1. பெரிய நில உடமையாளர்கள் விவசாயிகளின் சிறிய நிலங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு பெரிய விவசாயப்பண்ணைகள் உருவாக்கப்பட்டமை
2. பிரித்தானியா வர்த்தகச் சட்டங்கள் மூலம் குடியேற்ற நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளுடன் வர்த்தகத் தொடர்புகளை விரிவாக்கியமை..
3. பிரித்தானியச் சந்தைகளில் அதிக கேள்வி நிலவிய பொருட்கள் விவசாய நிலங்களில் உற்பத்தி செய்யப்பட்டமை.
4. விவசாய நிலங்களை இழந்த சிறிய கிராமிய விவசாயிகள் வேலை வாய்ப்புத் தேடி நகர்புறங்களை நோக்கி புலம் பெயர்ந்தமை.

- **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 36, 37 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

36. பல்வேறு கண்டுபிடிப்புக்களைச் செய்த சிலரின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - கிரகம்பெல்　　B - ரைட் சகோதரர்கள்

C – டெம்லர்　　D - ஜோன்லொகி பெயாட்

E – ஜேம்ஸ்வாட்

மேலே பெயர் குறிப்பிடப்பட்டகளுள் போக்குவரத்துத் துறையுடன் தொடர்புடைய கண்டுபிடிப்புக்களை முன் வைத்தவர்கள்

1. B,C,E　　2. A,B,C　　3. C,D,B　　4. A,C,D

37. தொடர்பாடல் துறையுடன் தொடர்புடைய கண்டு பிடிப்பாளர்களைக் குறிக்கும் விடை யாது?

1. A, E　　2. A, B　　3. C, B　　4. A, D

38. ஐரோப்பியரால் ஆசியாவிற்கு வருவதற்கு முதன் முதலாக கண்டுபிடிக்கப்பட்ட கடற்பாதை

1. போர்த்துக்கல் - கள்ளிக்கோட்டை வரையான பாதை
2. போர்த்துக்கல் - நன்னம்பிக்கை முனை வரையான பாதை
3. போர்த்துக்கல் - ஹிஸ்பானியலோ வரையான பாதை
4. போர்த்துக்கல் - பிலிப்பைன்ஸ் வரையான பாதை

39. பிரித்தானியர் இந்தியாவிற்கு வரும் போது இந்தியாவை ஆட்சி செய்த மன்னர்

1. பேரரசன் அக்பர்　　2. பேரரசன் திப்புசுல்தான்　　3.பேரரசன் ஜஹங்கீர்　　4. பேரரசன் அசோகன்

40. 1762 இல் பிரித்தானிய தூதுவன் ஜோன் பைபஸ் இலங்கைக்கு வருகை தந்த போது கண்டி இராட்சியத்தை ஆட்சி செய்த மன்னன்

1. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்
2. இராஜாதி இராஜசிங்கன்
3. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்
4. ஸ்ரீ விஜய இராஜசிங்கன்